தலைவர், காடச்சநல்லூர் கிராம ஊராட்சி அவர்களின் நடவடிக்கை
முன்னிலை திருமதி.க.சரோஜா,
ந.க.எண்.1/2023-2024, நாள் :28.11.2023

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் நாமக்கல் மண்டலம் ந.க.எண்.NKL/HUSOQ3B7/15793/2023/TCP நாள் : 18.11.2023 நாமக்கல் மாவட்டம் - குமாரபாளையம் வட்டம் - பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் - காடச்சநல்லூர் ஊராட்சி ச.எண்.206/7C-ல் 0.48 ஏக்கர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கிஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. உதவி இயக்குநர், மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். NKL/HUSOQ3B7/15793/2023/TCP நாள் : 18.11.2023
2. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் : 04.05.2017.
3. பள்ளிபாளையம் சார்பதிவகதானப் பத்திரம் ஆவண எண்.3458/2023, நாள் : 30.10.2023,
4. காடச்சநல்லூர் ஊராட்சிமன்ற தீர்மான எண்.1019 , நாள் :28 .11.2023

*******

ஆணை,

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், காடச்சநல்லூர் ஊராட்சி / கிராம ச.எண்.206/7C -ல் 0.48 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 11 மனைகளைக் கொண்ட மனைப்பிரிவிற்கு ம.வ / ந.க.எண். NKL/HUSOQ3B7/15793/2023/TCP -ன் படி மனைபிரிவு அங்கீகாரஎண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.365/2023-க்கு பார்வை 1 - இல் கண்டுள்ளவாறு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களது கடிதத்தின் மூலம் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நில பயன்மாற்றக் கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குரிய செலுத்துச்சீட்டு பார்வை 1-இல் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளது. மேலும் ஊராட்சிக்கு தானமாக வழங்கப்படி வேண்டிய இடங்களை ஊராட்சியின் பெயருக்கு மாற்றி பார்வை 3-இல் கண்டுள்ளவாறு பத்திர பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4-இல் கண்டுள்ளதீர்மானத்தின்படி உரிய கட்டணங்கள் வசூல் செய்து இறுதி ஒப்புதல் வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆகவே பார்வை 1 இல் கண்டுள்ள நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும் இத்துடன் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இம்மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகார இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

KADACHANALLUR PANCHAYAT * NAMAKKAL DT * PALLIPALAYAM BLOCK

தலைவர்,
காடச்சநல்லூர் கிராமஊராட்சி
பள்ளிபாளையம் ஒன்றியம்.

இணைப்பு :நிபந்தனைப்படிவம் -

பெறுநர்:
திரு.S.சம்பத்
25, காந்திபுரம்
பள்ளிபாளையம்,குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர் பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம்.
3. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நாமக்கல்.
4. வட்டாரவளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பள்ளிபாளையம் வட்டாரம்,நாமக்கல்.

## மனைப்பிரிவுநிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/நாமாஎண். **NKL/HUSOQ3B7/15793/2023/TCP** -ல் SWP/DTCP/ NAMAKKAL/LAYOUT No.365/2023 என எண்ணிடப்பட்டு வரைப்படத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

2. நகர் ஊரமைப்புத் துறையால் அங்க்கரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறை, மற்றும் ஊராட்சியின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. ஒருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொதுகாரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

5. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

6. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன் படுத்தவோ,நிலத்தைசீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

7. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறவேண்டும்.

8. மனுதாரர் உள்ளாட்சி நிர்வாகத்திடம் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ஒப்புதல் பெறப்பட்ட இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த ம.வ/நாமாஎண்.SWP/DTCP/ NAMAKKAL / LAYOUT No.365/2023 என தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

9. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடுநகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட வரைபடநகல் மற்றும் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.


### இறுதிஒப்புதல் வழங்கப்பட்டமனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விவரம்

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : 0.48 ஏக்கர் அல்லது 1950 ச.மீ |
| கோரியமனைகள் | : 13 Nos |
| ஒதுக்கியமனைகள் | : 11 Nos |
| பொதுஒதுக்கீடுபரப்பு | : 27.95 ச.மீ |

KADACHANALLUR PANCHAYAT
PALLIPALAYAM BLOCK
NAMAKKAL DT.

R. Saroja

தலைவர்,
கடச்சநல்லூர் கிராமஊராட்சி
பள்ளிபாளையம் வட்டாரம்.




1:400 (அ) 1"=33'0"

HI/SOQ/RT/15793/2023

சாலைகளின் பரப்பளவு பட்டியல்

மொத்தப்பரப்பளவு = 568.82ச.மீ

Approval No.LWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.365/2023.

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்

தே. புவனேஸ்வரி
அளவர் / உதவி வரைவாளர்

ச. சுரேந்திரன்
வரைவாளர் நிலை -

பொ. யமுனாதேவி
மேற்பார்வையாளர்

Signature valid

KADACHANALLUR PANCHAYAT
PALLIPALAYAM BLOCK
NAMAKKAL DT.

தலைவர்,
கடச்சநல்லூர் ஊராட்சி